பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
29 07 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

- உலகின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு குவாட் அமைப்பு நாடுகள் பாடுபட வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியா வந்துள்ள சௌதி அரேபியா அமைச்சர் திரு அப்துல் அஸீஸ் சல்மான், இருதரப்பு முதலீடுகளை அதிகரிப்பது குறித்து பிரமரின் முதன்மைச் செயலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.
- நாட்டின் வேலைவாய்ப்பின்மை மூன்று புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது என்று மத்திய வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக சிபிஐ இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் போட்டியின் பல்வேறு பிரிவுகளில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

உலகின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொள்வதில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய உறுப்பு நாடுகளைக் கொண்ட குவாட் கூட்டமைப்பு தயார் நிலையில் இருக்க வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இன்று தொடங்கிய குவாட் ெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், தொடக்கவுரை ஆற்றிய அவர், ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதில் உறுப்பு நாடுகள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்ற கூறினார்.

ஒத்துழைப்பு நாடுகளுக்கு இடையே நம்பிக்கைமிக்க வெளிப்படையான மின்னணு தொடர்புகள் உறுதி செய்யப்பட வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களை அதிக அளவில் கொண்டு வந்து, புதிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சிந்தித்து செயல்பட வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்க பாதுகாப்பான சர்வதேச கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஜனநாயக அரசியல், அங்காடிகளின் செயல்பாடு, பன்முகத்தன்மை கொண்ட சமுதாய அமைப்புகள் ஆகியவற்றை நெறிப்படுத்துவதற்கு விதிகள் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் வெளிப்படையான, தாராள வர்த்தக நடைமுறைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்றும், அரசியல் நிலைப்பாட்டையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

உறுப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கை மிகுந்த நட்புறவு, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சிக்கு உதவிடும் என்று அவர் கூறினார்.

நாடுகளுக்கு இடையேயான நட்புறவு, நாடுகளின் மக்களுக்கு இடையேயான தொடர்பை விரிவுபடுத்தும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்தியாவும் -சௌதி அரேபியாவும் இருதரப்பு முதலீடுகளை அதிகரிப்பது குறிதது உயர்மட்ட ஆலோசனை நேற்று நடைபெற்றது.

இந்தியா வந்துள்ள சௌதி அரேபியாவின் எரிசக்தித்துறை அமைச்சர் இளவரசர் அப்துல் அஸீஸ் சல்மான், பிரதமரின் முதன்மைச் செயலர் திரு பி கே மிஸ்ராவுடன் இது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார்.

இரு தரப்பிலும் பயன்தரத்தக்க பல்வேறு விஷயங்கள் இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெற்றன.

சௌதி அரேபியாவின் 100 பில்லியன் டாலர் முதலீடுகளுக்கு இந்திய அரசு முழு ஆதரவு அளிக்கும் என்று திரு மிஸ்ரா தெரிவித்தார்.

தொழில்நுட்ப ரீதியாகவும், முதலீடுகளுக்கான ஒப்பந்தம் மேற்கொள்வதற்காகவும் ஆக்கப்பூர்வமான பேச்சுக்களை அவ்வப்போது மேற்கொள்வது என்று இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

[]<<<>>>[]

மத்திய அரசு மேற்கொண்ட கொள்கை நடவடிக்கைகளினால் நாட்டில் வேலைவாய்ப்பின்மை மூன்று புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது என்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணைக்கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், நாட்டில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளதாகக் கூறினர்,

வரும் ஆண்டுகளில் வேலைவாய்ப்பின்மை மூன்று சதவீதமாக குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் வேலைவாய்ப்பை பெருக்கவும், இளைஞர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வரும் ஐந்து ஆண்டுகளில் நான்கு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த பட்ஜெட்டில் இரண்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தேசிய கல்விக்கொள்கை அமலுக்கு வந்து இன்றுடன் நான்காண்டுகள் நிறைவடைகிறது.

இதையொட்டி, புதுதில்லியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கலந்துகொண்டு, கல்வித்துறை சார்பில் பல்வேறு முன்முயற்சிகளை தொடங்கிவைக்கிறார்.

தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளை கற்றுக்கொள்வதற்காக தனித்துவமான கல்வி தொலைக்காட்சி அலைவரிசைகளை அவர் அறிமுகப்படுத்துகிறார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையில் புத்தகங்களையும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட உள்ளார்.

**[]<<<>>>[]**

சர்வதேச புலிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், நாட்டில் உள்ள புலிகளை பாதுகாப்பதற்கு உள்நாட்டு தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய வேண்டுமென உயிரியல் விஞ்ஞானிகளைக் கேட்டுக் கொண்டார்.

புலிகள் பாதுகாப்பு மற்றும் அவை வாழ்வதற்கு உகந்த சூழ்நிலை இயற்கையாக ஏற்படுத்தித் தருவது போன்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் புலிகள் தினம் ஜூலை 29-ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகில் 80 சதவீத புலிகள் இந்தியாவில் உள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் புலிகள் பாதுகாப்பு நடவடிக்கைள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - சரவணன் ) -30--- செகண்ட்*

[]<<<>>>[]

மதுபானக் கொள்கை முறைகேடு மற்றும் ஊழல் தொடர்பான வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக மத்திய புலனாய்வுப் பிரிவு சிபிஐ இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது,

தில்லி **Rouse** அவென்யூ தனி நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகையை சிபிஐ தாக்கல் செய்தது,

[]<<<>>>[]

அமர்நாத் குகைக்கோவிலில் உள்ள பனிலிங்கத்தை தரிசிப்பதற்காக ஆயிரத்து 832 பேர் கொண்ட யாத்திரிகர்கள் குழு இன்று ஜம்முவில் உள்ள பகவதிநகர் பயணியர் விடுதியிலிருந்து புறப்பட்டது.

இந்த குழுவினர் கஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள பல்தார் மற்றும் பஹல்காம் முகாம்கள் வழியாக பனிலிங்கத்தை தரிசிப்பதற்கான யாத்திரையை மேற்கொண்டுள்ளனர்.

[]<<<>>>[]

காவிரியில் நீர்வரத்து அதிகரித்ததன் காரணமாக மேட்டூர் அணை வேகமாக நிரம்பி வருகிறது.

அணையின் நீர்மட்டம் இன்று நண்பகல் நிலவரப்படி -117 அடியை எட்டியுள்ளது,

அணையின் நீர்மட்டம் வேகமாக நிரம்பி வருவதையடுத்து, அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -45---- செகண்ட்*

இதகிடையே கர்நாடக அணைகளிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வரும் தண்ணீரின் அளவும் சற்று குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) —30 செகண்ட்*

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் போட்டியின் பல்வேறு பிரிவுகளில் இந்திய வீரர் வீராங்கனைகள் இன்று பங்கேற்கின்றனர்.

மகளிர் பத்து மீட்டர் ஏர் ரைபிள் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ரமிதா ஜிண்டால் பங்கேற்கிறார்.

ஆடவருக்கான பத்து மீட்டர் ஏர் ரைபிள் இறுதிப்போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் பாபுடா பங்கேற்கிறார்.

பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் தகுதிச்சுற்று போட்டியில் மனு பாக்கர் - சரோப் ஜோத் சிங் இணையும், அர்ஜுன் சிங் சீமா – ரிதம் சங்வான் இணையும் பங்கேற்கிறது.

ஆடவர் ஹாக்கிப்போட்டியில் இன்று இந்தியா - அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது. இப்போட்டி மாலை மணி 4-15-க்கு தொடங்குகிறது.

பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென் - பெல்ஜியத்தின் **'Julien Carraggi'** –ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – தனிஷா இணை, ஜப்பானை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**